MC.65/2025

03.02.2026

PW2 – தேன்மொழி, க/பெ.சகாதேவன், வயது–40.

எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை, மனு ஏற்பு.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.12 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 12.27 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 03.02.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

மனுதாரர் சங்கீதா உங்களுடைய தங்கை என்றால் சரிதான். உங்கள் தங்கை திருமணத்தில் நீங்கள் பங்கேற்றீர்களா என்றால் பங்கேற்றேன். எத்தனை நபர்கள் பங்கேற்றீர்ள் என்றால் நானும் என் கணவரும் திருமணத்தில் பங்கேற்றோம். திருமணம் முடிந்து அவர்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்றால் மத்தூரில் வாழ்ந்தார்கள். எதிர்மனுதாரர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் பாப்பனூர். கயல்விழி யார் என்றால் எதிர்மனுதாரரின் இரண்டாம் மனைவி. எதிர்மனுதாரருக்கும் கயல்விழிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. எவ்வளவு நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் இரண்டாம் திருமணம் செய்துகொண்ட விவரம் தெரியும்

என்றால் கயல்விழிக்கு இரண்டாவது குழந்தை பிறந்தபோது தெரியவந்தது. கயல்விழிக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணமாகிய விவரம் தெரியவந்தபோது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். உங்களுடைய ஊர் கயல்விழியின் ஊரும் அருகாமையில் இருப்பதால் உங்களுக்கு கயல்விழிக்கு திருமணமான விவரம் அப்போதே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தற்போது முதல் மனுதாரர் எங்கு வசிக்கிறார் என்றால் தாய் வீட்டில் வசிக்கிறார். முதல் மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்றால் பீடி சுத்தும் வேலை செய்து வருகிறார். பீடி சுத்தும் தொழில் செய்யும் நீங்கள் எதிர்மனுதாரருக்கு ஐந்து சவரண் தங்க நகைகள் மற்றும் ரூ.5,00,000/– வரை பணம் கொடுப்பதற்கு வாய்பில்லை என்றால் சரியல்ல சீட்டு தொகை மற்றும் கடன் பெற்று அந்த தொகையை கொடுத்து தற்போது அந்த தொகையை சிறிதுசிறிதாக எங்கள் பெற்றோர் அடைத்து வருகின்றனர். எதிர்மனுதாரர் கேபிள் டிவி இயக்கும் தொழில் செய்து வருகிறார் எனவும் அவர் மாதம் ரூ.25,000/–ம் மேல் சம்பாதித்து வருகிறார் என்று தவறான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான்கு சக்கர வாகனம் விற்பதன் மூலம் மாதம் ரூ.1,00,000/–ம் கூடுதலாக வருமானத்தையும் சொந்த ஊரில் பல லட்சம் ரூபாய் வட்டிக்கு கடன் கொடுத்து சம்பாதித்து வருகிறார் எனவும் மேலும் சொந்த ஊரில் பல லட்சம் மதிப்புள்ள வீடு உள்ளதாகவும் எதிர்மனுதாரருக்கு குடும்ப சொத்தாக ஐந்து ஏக்கர் நிலம் உள்ளதாகவும் அதில் விவசாயம் செய்து அதன் மூலம் ரூ.3,00,000/– சம்பாதித்து வருவதாகவும் வங்கி கணக்கில் பல லட்சம் ரூபாய்

வைத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் மீது பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு பல லட்ச ரூபாய் சொத்து உள்ளது என்று சொல்லுவதற்கு அவரது சொத்து குறித்து ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தன்னுடைய இரண்டாவது மனைவி மற்றும் அவர்களது குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொல்லுவதை போன்று எதிர்மனுதாரருக்கு நிரந்தர வருமானம் எதுவும் இல்லை எனவும் அவரது இரண்டாவது மனைவியுடன் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் தான் எதிர்மனுதாரரின் பேச்சைக்கேட்காமல் தனியாக வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.02.03 16:13:37 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.